# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

# O.S. No. 95/2021

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 06 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முருகேசன் (PW–1) | வயது | : | 46/2025 |
| த/க பெயர் | : | திரு.சிவஞானம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | குன்னியூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) தாவா சொத்து 5 ஏர்ஸ்க்கு மேல் இடம் உள்ளது என்றால் இல்லை. அந்த 5 ஏர்ஸ்சில் எவ்வளவு விஸ்தீரணம் என்னிடம் உள்ளது என்றால் முழுவதும் என்னிடம் உள்ளது. எனது வேலியை பிரதிவாதிகள் அப்புறப்படுத்தியதால் வழக்கு மூலம் ஏற்பட்டதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வேலி வைக்க பிரதிவாதிகள் அனுமதிக்கவில்லை. அந்த இடத்தில் பிரதிவாதிகளால் அமைக்கப்பட்ட வேலி இருந்தது என்றால் சரியல்ல.

2) நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் வேலி வைக்க முயற்சி செய்யவில்லை என்றும், தாவா சொத்தானது ஆண்டு ஆண்டு காலமாக பிரதிவாதிகளின் அனுபோகத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளால் தாவா சொத்தில் பூவரசு போன்ற போத்து வைத்து தற்போது மரமாக வளர்ந்து வந்துள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அனுபோகத்தில் உள்ள மரக்கிளையை வெட்ட வந்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3) தாவா சொத்தானது எனது அனுபோகத்தில் ஒருபோதும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு கீழ்புறம் உள்ள சர்வே எண்.289/17ல் 4 செண்ட் நிலம் பிரதிவாதிகளின் அனுபோகத்தில் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. சர்வே எண்.289/17ல் 4 செண்ட் நிலமும், பல ஆண்டுகளாக பிரதிவாதிகள் வேலி வைத்து அனுபோகம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.289/17ல் 4 செண்ட் நிலத்தில் 1ம் பிரதிவாதியானவர் வாழை மரம், சுண்டைக்காய் செடி,

தென்னை மரம், கொய்யா மரம் மற்றும் தென்னங்கன்றுகள் ஆகியவை பயிர் செய்யப்பட்டு பிரதிவாதிகளால் பராமரிக்கப்பட்டு இன்று வரை அனுபோகம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

4) 4ம் பிரதிவாதியின் வீட்டிற்கு எதிரே தாவா சொத்தில் பிரதிவாதிகள் சென்று வருவதற்கு கேட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அனுபோகத்திலுள்ள 4 செண்ட் தாவா சொத்திற்கு எனது வீட்டிற்கு சென்று வருவதற்கு எந்தவித பாதையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், 4ம் பிரதிவாதி ராஜ்குமாருக்கும் இடையில் 14.08.2021ம் தேதியில் தாவா சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பிரச்சனையானது பிரதிவாதிகளின் அனுபோகத்திலுள்ள தாவா சொத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்ய முயன்றதால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

5) என் மீது 22.08.2021ம் தேதியன்று 4ம் பிரதிவாதி ராஜ்குமார் கோட்டூர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் 4ம் பிரதிவாதி என் மீது கொடுத்த புகாரின் பேரிலும், நான் 4ம் பிரதிவாதி மீது கொடுத்த புகாரின் பேரிலும் இரு தரப்பிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கிற்கு பின்னிட்டுதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி தாக்கியதில் அவருக்கு கண்ணில் அடிபட்டு அறுவை சிகிச்சை செய்து இன்று வரை சிகிச்சை பலன் இல்லாமல் இருந்து வருகிறார் என்பதால் என் மீது 4ம் பிரதிவாதி கொடுத்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) 07.08.2020ம் தேதியன்று யார் யார் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் நானும், எனது அம்மாவும் இருந்தோம், வேறு யாரும் இல்லை. பிரதிவாதிகள் தாவா சொத்தினை என்னிடம் கிரயம் பெற்றார்கள் என்றும், 07.08.2020ம் தேதியன்று பிரச்சனை செய்தார்கள் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 23.09.2021ம் தேதியன்று நான் தாவா சொத்தில் இருந்தபோது பிரதிவாதிகள் அதிலுள்ள வேலியை அப்புறப்படுத்த முயற்சி செய்தார்கள் என்றும், அப்போது அருகில் உள்ளவர்களின் துணையுடன் தடுத்துவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) தாவா சொத்து 5 ஏர்ஸில் கிழக்கு புறம் 4 செண்ட் இடம் பிரதிவாதிகளின் அனுபோகத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனக்கும், 4ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை தொடர்புடைய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த

விவரங்களை சொன்னால் எனக்கு பாதகமாக அமையும் என்பதால் அந்த விபரங்களை மறைத்து இந்த வழக்கினை வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) தாவா சொத்து 5 ஏர்ஸில் 4 செண்ட் நிலம் பிரதிவாதிகளின் அனுபோகத்தில் இருப்பதால் மேற்கண்ட விபரங்கள் யார் அனுபோகத்தில் உள்ளது என்பதை தெரிந்துக்கொள்ள வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து இடத்தை பார்வையிட்டால் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கு இந்நீதிமன்றத்தில் மனு செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தானது எனது அனுபோகத்தில் இருந்தால் மட்டும்தான் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், தாவா சொத்து எனது அனுபோகத்தில் இருந்ததால்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

9) தாவா சொத்தில் கிழக்குபுறம் 4 செண்ட் பிரதிவாதிகளின் அனுபோகத்தில் இருப்பதால் அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. நான் கோருகின்ற பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.12 10:14:31 +0530

District Munsif
Mannargudi.